Tamil

# பள்ளி வாயில்களைக் கடந்து: அறிக்கையின் தொகுப்புரை

**மே 2008ல் வெளியிடப்பட்ட அறிக்கை**

*'பள்ளி வாயில்களைக் கடந்து'* என்ற அறிக்கையானது, 2005ல் தொடங்கப்பட்ட *உள்சேர்ப்பு உயர்நிலைப் பள்ளிகள் திட்டத்தின் (Inclusive Secondary Schools Project)* ஒரு பகுதியாக நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகளை அளிக்கிறது, மற்றும் இது அகதிக் குழுவால் வழங்கப்படுவதுடன், KPMG Foundation னின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டதாகும். இத்திட்டத்தின் ஒட்டுமொத்த நோக்கம், பள்ளிகளையும், அகதி மற்றும் அடைக்கலம் நாடும் இளம் வயதினர், அவர்களது பெற்றோர், பராமரிப்பாளர்கள் மற்றும் அகதி சமுதாய அமைப்புகளையும் (RCOs) இணைப்பதற்கான ஆராய்ச்சி மற்றும் பணி செய்வதற்கான முன்னோடியாக உள்ள புதிய வழிகளைக் கண்டறிவதாகும். இங்கிலாந்தில் உயர்நிலைக் கல்வி தொடர்பாக அகதிகள் மற்றும் அடைக்கலம் நாடுவோருக்கு உள்ள தேவைகள் மற்றும் அவர்களது அனுபவங்களை ஆராய்ந்துள்ள ஆராய்ச்சி நிலையின் கண்டுபிடிப்புகளை இந்த அறிக்கை ஆய்வு செய்கிறது. பெற்றோர்/பராமரிப்பாளர் ஈடுபாட்டின் மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அம்சங்களை ஆராய்வதற்கும், சிறந்த செயல்முறைகளை உருவாக்குவதற்கும் *உள்சேர்ப்பு உயர்நிலைப் பள்ளிகள் திட்டம் (Inclusive Secondary Schools Project)* பள்ளிகள் மற்றும் அகதி சமுதாயம்/உதவும் அமைப்புகளிடையே முன்னோடி கூட்டாண்மைகளையும் உருவாக்கியுள்ளது. ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆகிய இருநிலைகளிலும் கண்டறியப்பட்டவை, அகதி மற்றும் அடைக்கலம் நாடும் இளம் வயதினரின் கல்வியில் அகதி சமுதாயத்தின் ஈடுபாட்டினை அதிகரிப்பதற்காக பள்ளிகள் மற்றும் அகதி சமுதாயம்/உதவும் அமைப்புகளுக்காக உருவாக்கப்பட்டுள்ள ஆதார தொகுப்பிற்கு அடிப்படையாக அமைந்துள்ளன.

அறிக்கையில் கூறப்பட்டுள்ள ஆராய்ச்சியானது, 70 ஆழ்ந்த நேர்காணல்கள், ஆர்சிஓக்கள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் உள்ளூர் அதிகார அமைப்புகளுடனான வினாத்தொகுப்பு அடிப்படையிலான ஆய்வுகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது, இதன் நோக்கம்:

- இக்குழுக்களின் அனுபவங்கள் மற்றும் தேவைகளை ஆராய்தல்
- உள்ளடக்கத்திற்கான முக்கிய தடைகளை அடையாளம் காணல், மற்றும்
- இத்தடைகளை சமாளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ள நடைமுறைகளுக்கான உதாரணங்களை அடையாளம் காணல்.

அத்தியாயங்கள் இரண்டு மற்றும் மூன்றில், கொள்கை மற்றும் சட்டம்சார்ந்த அம்சங்கள் மட்டுமல்லாது, ஆராய்ச்சி வடிவமைப்பும்கூட விளக்கப்பட்டுள்ளன. அத்தியாயம் நான்கு, உயர்நிலைக் கல்வி தொடர்பாக இளம் வயதினரின் பெற்றோர்/பராமரிப்பாளர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை ஆராய்கிறது. அத்தியாயம் ஐந்து, கல்வியை அணுகுதல் மற்றும் அதில் சாதனை புரிதலில் உள்ள தடைகளை விளக்கம் அதே சமயம், அத்தியாயம்

British Refugee Council, (commonly called the Refugee Council) is a company limited by guarantee registered in England and Wales, [No 2727514] and a registered charity, [No 1014576].
Registered office: 240-250 Ferndale Road, London SW9 8BB, United Kingdom, VAT reg no: 936 519 988

ஆறு, இத்தடைகளை வெல்வதற்கு அகதி சமுதாயங்களுக்கு உதவும் நடைமுறைகளை சிறப்பித்துக் கூறுகிறது. அகதி சமுதாயத்தின் தேவைகளை சிறந்த முறையில் பூர்த்தி செய்வதற்கு சம்பந்தப்பட்ட அமைப்புகளுக்கு உதவும் பொருட்டு உருவாக்கப்பட்டுள்ள பரிந்துரைகளுடன் இந்த அறிக்கை நிறைவு பெறுகிறது.

## அனுபவம் மற்றும் ஈடுபாடு

இந்த ஆராய்ச்சியில், **இளம் வயதினர்** மிக உயர்ந்த நிலைகளில் பெற்றோர்/பராமரிப்பாளர் ஈடுபாட்டை அடையாளம் கண்டதுடன், அது குறிப்பிடத்தக்க அளவில் வேறுபட்டும் இருந்தது, உதாரணமாக ஒரே முறை சந்திப்புகள் முதல் அடிக்கடி சந்திப்பது வரையிலாகும். ஆங்கில அறிவு ஒரு தடையாக இருந்தாலும், இத்தடையை பொருட்படுத்தாது பெற்றோர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள முயற்சித்ததுடன், தங்கள் பெற்றோர்/பராமரிப்பாளரிடமிருந்து தாங்கள் பெறும் உதவி குறித்து இளம் வயதினர் பொதுவாக நேர்மறையாகவே உணர்ந்திருந்தனர்.

**பெற்றோர்/பராமரிப்பாளர்கள்** பள்ளிகள் குறித்து பொதுவாக திருப்தியையே வெளிப்படுத்தினர். குறிப்பாக பள்ளி மற்றும் உதவும் தன்மை கொண்ட மற்றும் அணுகக்கூடிய பணியாளர்களுடன் சிறந்த தகவல் பரிமாற்றத்தின் ஆதரவு கிட்டும் நிலைகளில் அதிக அளவில் ஈடுபாடு காணப்பட்டது. சில பெற்றோர்/ பராமரிப்பாளர்கள், சிறந்த தகவல் பரிமாற்றம் மற்றும் பள்ளிகளிடமிருந்து கருத்துக்களைப் பெறுதல் ஆகியவற்றின் மூலம் இந்த ஈடுபாட்டை மேம்படுத்தும் வழிமுறைகளைப் பரிந்துரைத்தனர்.

**பள்ளிகள்** சிறந்த ஈடுபாட்டை, இளம் வயதினரின் ஒட்டுமொத்த நலன் மற்றும் சாதனைக்கான முக்கிய அம்சமாகவும், தங்கள் குழந்தைகளின் கல்வியில் பங்கேற்பதற்கு பெற்றோர்/பராமரிப்பாளர்களுக்கு ஆற்றலளிக்கக் கூடிய ஒன்றாகவும் அடையாளம் காண்கின்றன. இருப்பினும், சில பள்ளிகள், சில பெற்றோர்/பராமரிப்பாளர்களை ஈடுபடுத்துவதில் சிரமத்தை எதிர்கொண்டதுடன், வரவேற்கும் சூழல் மற்றும் சேர்ப்புக்கான முக்கியத்துவத்தையும் உணர்ந்தன.

ஆய்வில் உள்ள **ஆர்சிஓக்கள்** மாணவரின் சாதனைக் குறைபாடு பற்றிய கவலைகள் மற்றும் பள்ளிப் பாடங்களிலும், நடத்தையியல் பிரச்சனைகளிலும் உதவித் தேவைப்படுதல் உட்பட, தங்களிடம் கொண்டுவரப்படும் பல்வேறு வகையான தேவைகளின் பொருட்டு உருவாக்கப்பட்டுள்ள கல்விசார்ந்த சேவைகளை வழங்குகின்றன. சாதனை அளவுகளை மேம்படுத்துதல், இளம் வயதினரின் பாரம்பரியம் மற்றும் மொழியை மேம்படுத்தும் முயற்சிகள், மற்றும் ஆங்கிலம் சொல்லித் தருவதன் மூலம், பெற்றோர்/பராமரிப்பாளர்களை ஒருங்கிணைத்துக் கொள்ள உதவுதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் ஆர்சிஓக்கள் அடையாளம் கண்டுள்ளனர். சில நிகழ்வுகளில் குழந்தைகளைக் காட்டிலும் பெற்றோர்/பராமரிப்பாளர்களுக்கு தங்களை ஒருங்கிணைத்துக் கொள்வதில் அதிகம் சிரமம் இருப்பதாகத் தோன்றியதால், பெற்றோர்/பராமரிப்பாளர்களுக்கு ஆதரவு வழங்குவதன் அவசியத்தை ஆர்சிஓக்கள் குறிப்பாக வலியுறுத்தியுள்ளன.

## உள்சேர்ப்புக்கான தடைகள்

உயர்நிலைக் கல்வியில் இளம் வயது அகதி மற்றும் அடைக்கலம் நாடுவோர் மற்றும் பெற்றோர்/பராமரிப்பாளர்களை சிறந்த முறையில் சேர்த்துக் கொள்வதற்கு குறுக்கீடாக இருக்கக்கூடிய ஏராளமான முக்கிய தடைகளை இந்த ஆராய்ச்சி அடையாளம் கண்டுள்ளது.

- இடங்களுக்காக காத்திருப்பதில் அளவிற்கதிகமான தாமதங்கள் (ஏழு மாதங்கள் வரையில்) உட்பட, **பள்ளிகளை அணுகுவதில் பல்வேறு குறிப்பிடத்தக்க சிரமங்களுக்கு** பதிலளிப்போர் ஆளாகியுள்ளனர். பல்வேறு ஆதாரங்களின் மூலம்

வழங்கப்பட்ட உதவிகளாலும் பல பதிலளிப்போர்களின் விஷயத்தில் இந்தத் தாமதத்தைக் குறைக்க முடியவில்லை.

- **துன்புறுத்தல் மற்றும் இனக்கொடுமை** ஆகியவை இளம் வயதினர் மற்றும் ஆர்சிஓக்களால் தெரிவிக்கப்பட்ட முக்கிய கவலைகளாகும். தங்களை அகதிகளாக அல்லது அடைக்கலம் நாடுவோராக வெளிப்படுத்திக் கொள்வதற்கு இளம் வயதினர் தயங்குவதாகவோ, அல்லது மேலும் அவமானப்படுத்தப்படக்கூடும் என்ற அச்சம் காரணமாக தங்கள் கடந்த காலம் பற்றி அவர்கள் பேச விரும்பாததாகவோ தெரிவிக்கப்பட்டுள்ளது. இது அடிக்கடி தாங்கள் கையாள வேண்டிய ஒரு பிரச்னையாக இருப்பதாக ஆர்சிஓக்கள் அடையாளம் கண்டுள்ளனர்.

- **உள்சேர்ப்புக்கு நிதிசார்ந்த தடைகளை குடும்பங்கள் தெரிவித்துள்ளன,** உதாரணமாக, பாடத்திட்டம்சாரா செயல்பாடுகளுக்கு நிதி உதவி கிடைக்காத நிலை, பள்ளிப் புத்தகங்கள், சீருடைகள் மற்றும் பள்ளி தொடர்பான கூடுதல் பொருட்களை அளிப்பதில் சிரமம் போன்றவை. தங்களை பள்ளிகளுடன் ஒருங்கிணைத்துக் கொள்வதில் இளம் வயதினருக்குள்ள ஆற்றலில் இது ஓர் எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

- **ஆர்சிஓக்கள் ஆதாரங்களின் பற்றாக்குறையைத் தெரிவித்துள்ளன** இதனால் கல்வி தொடர்பான சேவைகளுக்கும், சேவைகள் வழங்குவதற்கு இலவச அல்லது மலிவான இடவசதியைப் பெறுவதற்கும் சிரமங்கள் தோன்றியுள்ளன. உள்சேர்ப்புக்கான நிதியுதவி பெரும்பாலும் குறுகிய காலத்திற்கு அளிக்கப்படுவதால், செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய இடங்களில், அவற்றின் தாக்கத்தை இது கட்டுப்படுத்துவதாக உள்ளது.

- ஆர்சிஓக்கள் மற்றும் பள்ளிகள் ஆகிய இரண்டுமே பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு **ஆற்றல்மிக்க பயிற்சி அளிப்பதற்கான ஆதாரத் தடைகளை** அனுபவித்து வருவதால், அது திட்டமிட்ட ஆலோசனை அல்லது ஆசிரியர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற அவற்றின் திறனைக் கட்டுப்படுத்துவதாக உள்ளது.

- கல்வி செயல்முறையில் பெற்றோர்/பராமரிப்பாளர்களை சிறந்த முறையில் ஈடுபடுத்துவதற்கு ஆங்கில மொழித் திறன்களின் குறைபாடு ஒரு முக்கியமான தடையாக உள்ளது. **மாணவர்களின் முன்னேற்றத்தைப் பற்றி தகவல் தெரிவிப்பதில்,** குறிப்பாக **மொழிபெயர்ப்பாளர்களாக இளம் வயதினரை சார்ந்திருக்கும் நிலையில், தங்களுக்கு சிரமம்** உள்ளதாக பள்ளிகள் கூறுகின்றன.

- **யூகே அடைக்கல அமைப்பு** ஏற்கனவே பள்ளிகளில் உள்ள, ஆனால் நீக்கப்படக்கூடிய அச்சம் உடைய அடைக்கலம் நாடுவோர் அனுபவித்துவரும் நிலையற்ற தன்மை உள்ளிட்ட, ஏராளமான தடைகளை தானாகவே உருவாக்கி வருகிறது. பரவலாக்கப்படுதல் மற்றும் தற்காலிக தங்குமிட வசதியை சார்ந்திருத்தல் ஆகியவை **புதிய பள்ளிகளுக்கு குழந்தைகள் அடிக்கடி மாற்றப்படுவதைக் குறிப்பதால்,** சமூகத்துடன் பழகுதல், நட்பு பாராட்டுதல் மற்றும் சமுதாயங்களிடமிருந்து ஆதரவு பெறுதல் ஆகியவற்றிற்கான அவர்களுடைய ஆற்றல் மீது அது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

- **அதிர்ச்சி மற்றும் தப்பியோடுதல் ஆகிய அனுபவங்கள்** குழந்தைகளின் நடத்தையில், குறிப்பாக ஆசிரியர்கள் மற்றும் சக தோழர்களுடனான அவர்களுடைய உறவுகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

- இளம் வயதினர் மற்றும் பெற்றோர்/பராமரிப்பாளர்களுக்கு **பள்ளிகளின் அமைப்பு பரிச்சயமில்லாததாக இருக்கக்கூடும்** மற்றும் பள்ளிகளை அச்சுறுத்துபவையாகவும், குழப்பம் அளிப்பவையாகவும் அவர்கள் உணரக்கூடும்.

- பள்ளிகளின் செயல்பாட்டை மேம்படுத்துவதற்கு உதவும் வகையில் ஆர்சிஓக்கள் அமைக்கப்பட்டிருந்தாலும், பள்ளிகளை அணுக முடியாத அவர்களது நிலை மற்றும் ஆர்சிஓக்களை அடையாளம் கண்டு அவற்றை பள்ளிகளால் அணுக முடியாத நிலை

ஆகியவை, இப்பிரச்னைகளை எதிர்கொள்வதற்கு **கூட்டாகச் செயல்படும் சூழலை உருவாக்க முடியாத நிலையை** ஏற்படுத்தக்கூடும்.

## அகதிகள் மற்றும் அடைக்கலம் நாடுவோரின் தேவைகளைப் பூர்த்தி செய்தல்

மேலே விளக்கப்பட்டுள்ள தடைகளை நீக்குவதற்கு ஏராளமான செயல்முறைகளை இத்திட்டம் அடையாளம் கண்டுள்ளது. அச்செயல்முறைகள் பின்வருமாறு:

- பள்ளியிலும், சமுதாயத்தில் பரவலாகவும் முக்கிய பங்கினை வகிப்பதற்கு அகதி பெற்றோர்/பராமரிப்பாளர்களுக்கு உதவுவதற்காகவும், இளம் வயதினரை ஈடுபடுத்தும் பொருட்டும், பள்ளி தினத்தையும் கடந்த செயல்பாடுகளை வழங்குவதற்கான விரிவாக்கப்பட்ட பள்ளி அந்தஸ்தைப் பெறுதல்.
- கல்வி தொடர்பான செயல்பாடுகளை வழங்குவதற்காக சில ஆர்சிஓக்கள் வெற்றிகரமாக நிதிகளை உருவாக்கியுள்ளன.
- சில பள்ளிகள் வீட்டுப் பள்ளி மற்றும் சமுதாயங்களுக்கும் பள்ளிகளுக்கும் இடையில் முக்கிய இணைப்புகளை வழங்கும் சமுதாய இணைப்புப் பணியாளர்களை பணியமர்த்தியுள்ளன. வேறுசில பள்ளிகள், இப்பணிக்காக முறைசாரா சமுதாய ஆர்வலர்களைப் பயன்படுத்தியுள்ளன.
- கற்றல், சேர்ப்புகள் மற்றும் பொது ஆதரவின் பொருட்டு உதவி வழங்குவதற்காக நிகர் ஆசான்களை பயன்படுத்தியுள்ளதாக பள்ளிகள் மற்றும் ஆர்சிஓக்கள் தெரிவித்துள்ளன.
- சிறிய எண்ணிக்கையிலான பள்ளிகள், அதிர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டுள்ள இளம் வயதினருக்கு உளவியல் மற்றும் சமூக ரீதியான ஆதரவை வழங்குவதற்காக, சிறப்பு சேவைகள் மற்றும் அமைப்புகளுடன் சிறந்த தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளன.
- மொழிசார்ந்த ஆதரவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டதுடன், அது பொதுவாக வழக்கமான வழிமுறைகளிலேயே வழங்கப்பட்டது. இருப்பினும், பள்ளிகள் மற்றும் ஆர்சிஓக்களால் நடத்தப்படும் சனிக்கிழமை பள்ளிகள் போன்ற பிற முறைகள் பலவும் அடையாளம் காணப்பட்டன.
- சில பள்ளிகள், பெற்றோர்/பராமரிப்பாளர்களுக்கான மொழிபெயர்ப்பு சாதனங்கள் மற்றும் மொழிபெயர்ப்பாளர்களை அளித்தல் ஆகியவை பற்றி தெரிவித்துள்ளன.
- பல பள்ளிகள், முன்வடிவமைக்கப்பட்ட சேர்ப்பு முறைகளை இளம் வயதினர் மற்றும் பெற்றோர்/ பராமரிப்பாளர்களுக்கு வழங்கியுள்ளன, இவை பெரும்பாலும், சேர்த்தலுக்கான நடைமுறை, பாடத்திட்டம் மற்றும் பள்ளியுடன் ஈடுபாடு கொள்வதற்கான வாய்ப்புகள் குறித்த விவரங்களைக் கொண்டிருக்கும். சில பள்ளிகள் இளம் அகதிகளின் தேவைகளுக்கேற்ப வடிவமைக்கப்பட்ட, மொழிபெயர்ப்புடன்கூடிய சிற்றேடுகளை உருவாக்கியுள்ளன.
- ஒருவருக்கு ஒருவர் முறை ஆலோசனை மற்றும் பள்ளியில் தங்கள் குழந்தைகளுக்கு எவ்வாறு உதவமுடியும் என்பவை உள்ளிட்ட, ஆங்கிலப் பள்ளி முறை பற்றிய விவரங்களை பெற்றோர்/ பராமரிப்பாளர்களுக்கு ஆர்சிஓக்கள் வழங்கியுள்ளன.
- சில பள்ளிகள், அகதி சமுதாய குழுக்களுக்கு கா∴பி காலைகள் மற்றும் உதவி அமர்வுகள் போன்ற தொடர் ஈடுபாட்டு முறைகளையும் உருவாக்கியுள்ளன.
- அகதி மற்றும் அடைக்கலம் நாடும் இளவயதினர், அவர்களது பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களின் கல்விசார்ந்த அனுபவங்களை மேம்படுத்துவதற்காக உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் ஆர்சிஓக்கள் மேற்கொண்டுள்ள கூட்டுப்பணியின் உதாரணங்களும் கொடுக்கப்பட்டன.

## முடிவுகள் மற்றும் பரிந்துரைகள்

அகதி சமுதாயங்களின் தேவைகளை சிறந்த முறையில் பூர்த்தி செய்வதற்கு, சம்பந்தப்பட்ட அமைப்புகளுக்கு உதவக்கூடிய பரிந்துரைகளுடன் இந்த அறிக்கை நிறைவடைகிறது. சம்பந்தப்பட்ட அமைப்புகள் என்பவை, உயர்நிலைப் பள்ளிகள். உள்ளூர் அமைப்புகள், ஆர்சிஓக்கள், அகதி உதவி அமைப்புகள் மற்றும் அரசுத் துறைகளை உள்ளடக்கியவையாகும்.

முழுமையான ஆராய்ச்சி அறிக்கை, ஆய்வு கண்டுபிடிப்புகள் மற்றும் அகதி குழந்தைகளின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பள்ளிகளுக்கும் ஆர்சிஓக்களுக்கும் உதவும் வகையில் *உள்சேர்ப்பு உயர்நிலைப் பள்ளிகள் திட்டத்தின் (Inclusive Secondary Schools Project)* ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டுள்ள ஆதார தொகுப்பு ஆகியவற்றை பின்வரும் வலைத்தளத்தில் காணலாம்: www.refugeecouncil.org.uk/inclusiveschools.